## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.36/2022

## 29.07.2025

## P.W.1- ரஜினி

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தற்போது உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். பிரதிவாதி எனக்கு நண்பர் ஆவார். அவரது குடும்பத்தை பற்றி எனக்கு தெரியும். பிரதிவாதியின் அம்மா ஆசிரியராக பணிபுரிந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவரது அப்பா உதவி வட்டாட்சியராக பணிபுரிந்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை, பழக்கத்தின் அடிப்படையில் கடனாக கொடுத்தேன். குற்றப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்த குணவாளனை தெரியும். 05.05.2021ல் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தபோது எதற்காக புரோநோட்டை பதிவு செய்தேன் என்றால் பிரதிவாதி 6 மாதகாலத்தில் திரும்ப செலுத்த அவகாசம் கேட்டதால் பதிவு செய்தேன். பிரதிவாதி விக்கிரமங்கலம், இந்திரா நகரில் தோட்ட வீட்டில் குடியிருந்தார். 21.01.2022ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பை ஏன் எழுவம்பட்டிக்கு அனுப்பினேன் என்றால் அப்போது பிரதிவாதி அங்கிருந்ததால் அனுப்பப்பட்டது. 27.01.2022ல் பிரதிவாதி அந்த விலாசத்தில் இல்லாததால் மேற்படி அறிவிப்பு திருப்பப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி மீது குற்ற வழக்கு உண்டு என்றால் சரிதான். பிரதிவாதி திருட்டு நகைகளை வாங்கி என்னிடம் அடமானம் வைத்ததாக குற்ற வழக்கு உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் விற்பனை செய்த நகை திருட்டு நகை என்பதால் போலீசார் மீட்டதால் அந்த பணத்திற்கு ஆதரவாக போலீசார் உதவியுடன் புரோநோட்டை பதிவு செய்து வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பணத்தை எவ்வாறு கொடுத்தேன் என குறிப்பாக சொல்லவில்லை என்றால் ரொக்கமாக கொடுத்தேன். நண்பர் என்றால் சுமார் ரூ.1 லட்சம் வரை கடனாக கொடுப்பார்கள், திருட்டு நகை வாங்கி நஷ்டம் ஏற்பட்டதால் ரூ.3,55,000 கடன் கொடுத்ததாக புரோநோட்டு எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும், காவல்துறையினரால் மிரட்டி புரோநோட்டு எழுதி

வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் நேரடியாக கடன் வாங்கததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.07.29 16:42:18 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.